தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
பிப்ரவரி 7, 2011 இதழுடன் இணைப்பு

வேர்ட் 2010 உங்கள் வசமாக்க

எந்த இடத்திலும் இன்டர்நெட்

விரும்பும் அளவில் விண்டோ

ஸ்கைப் ஆட் அன் தொகுப்பு நீக்கம்

எத்தனை நாளைக்கு வரும் பிளாஷ் ட்ரைவ்?

பிளாப்பி, சிடி என்பதையெல்லாம் விட்டுவிட்டு பிளாஷ் ட்ரைவிற்கு மாறியவரா நீங்கள்? உங்களின் பிளாஷ் ட்ரைவ் எத்தனை நாளைக்கு கெட்டுப் போகாமல் இருக்கும் என்று தெரியுமா? ஏனென்றால் பிளாஷ் ட்ரைவ் குறித்த இந்த கேள்விக்கு எந்த நிறுவனமும் பதில் கொடுத்தது இல்லை. இது குறித்த சில அடிப்படைத் தகவல்களை இங்கு பார்க்கலாம்.

பிளாப்பியில் மேற்கொள்வது போல பிளாஷ் ட்ரைவிலும் தொடர்ந்து பைல்களை எழுதலாம்; அழிக்கலாம் மற்றும் அதன் மேலேயே எழுதலாம். அந்த அளவிற்கு இவை மிகவும் உறுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அப்படியானால் எத்தனை முறை இது போல நாம் அழித்து அழித்து எழுத முடியும்? ஒரு தடவை அழித்து எழுதுவதை ஒரு சைக்கிள் (சுற்று) என அழைக்கின்றனர். அப்படிக் கணக்கு பார்த்தால் பல நூறு ஆயிரம் முறை இந்த சுற்றினை மேற்கொள்ளலாம். ஆனால் நாள் ஆக ஆக இந்த சுற்று மிக மெதுவாக மேற்கொள்ளப்படும். இதிலிருந்து பிளாஷ் ட்ரைவிற்கு வயதாகிவிட்டது என்று நீங்கள் முடிவு செய்து கொள்ளலாம். எந்நேரமும் அது தன் செயல்பாட்டை நிறுத்திவிடும் என்றும் முடிவெடுக்கலாம். ஆனால் அது எப்போது என்பது உங்களின் செயல்முறையைப் பொறுத்தும் உள்ளது. எத்தனை முறை அடிக்கடி பயன்படுத்துகிறீர்கள், எவ்வளவு அளவிலான பைல்களை எழுதுகிறீர்கள், மற்ற விஷயங்களுக்கு இந்த ட்ரைவைப் பயன்படுத்துவது மற்றும் உங்கள் கம்ப்யூட்டரின் சிபியு வேகம் என்ற விஷயங்களைப் பொறுத்து உங்கள் பிளாஷ் ட்ரைவ் தன் செயல்பாட்டை இழந்து ஒரு கட்டத்தில் முடித்துக் கொள்ளும்.

கவலைப் படாதீர்கள். பொதுவாக நீங்கள் செலுத்திய பணத்திற்கேற்ப பிளாஷ் ட்ரைவ்கள் பல காலம் உழைக்கும். உங்களுக்கே அலுத்துப் போகும் போதுதான் அல்லது வேறு ட்ரைவ்களின் பால் மனது செல்லும் போதுதான் இதன் பயன்தன்மை நிற்கும்.

உள்ளே

வேர்ட் 2010 - உங்கள் வசமாக்க பக்கம் 3

எந்த இடத்திலும் இன்டர்நெட் பக்கம் 7

ஸ்கைப் ஆட் ஆன் தொகுப்பு நீக்கம் பக்கம் 14

வாசகர்களே . . .

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 ஜூலை மாதத்திற்கு பின்னர் வெளியான 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை 600 008.

computermalar@dinamalar.in

வேர்ட் 2010 - உங்கள் வசமாக்க

வேர்ட் 2010 தொகுப்பைப் பொறுத்தவரை, அதன் மிகச் சிறந்த அம்சமாக, அதன் வளைந்து கொடுக்கும் தன்மையினைக் கூறலாம். நம் விருப்பப்படி, பல வசதிகளை அமைத்துக் கொண்டு எளிதாகச் செயல் படலாம். இந்த வசதி, வேர்ட் 2007 தொகுப்பில் தரப்பட்ட ரிப்பன் இடைமுகத்தில் தரப்படவில்லை. இத்தொகுப்பு தரும் அந்த வசதிகளை எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்று இங்கு பார்க்கலாம்.

நீங்கள் என்ன செயல்பாடுகளை மேற்கொள்ள விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்து, இவை நகாசு வேலைகளாகவோ அல்லது செயல்பாட்டு வேலை களாகவோ இருக்கலாம். எடுத்துக் காட்டாக, நீங்கள் வேர்ட் மிக விரைவாகச் செயல்பட வேண்டும் என விரும்பலாம். டூல்ஸ் மற்றும் டாகுமெண்ட் குறித்த விபரங்களை எளிதாகப் பெறும் வகையில் வைக்கலாம். உங்கள் ஆசை அல்லது விருப்பம் எதுவாக இருந்தாலும், அதனை நிறைவேற்றிக் கொள்ள வேர்ட் 2010, அதற்கான வழிகளைத் தருகிறது.

1. Quick Access Toolbar–ஐ மாற்றி அமைக்க: குயிக் அக்செஸ் டூல்பார் என்பது, சில டூல்ஸ் கொண்ட ஒரு சிறிய செட். இது வேர்ட் 2010ன் இடது மேல் மூலையில் காணப்படும். மாற்றப்படாத நிலையில் இந்த டூல்பாரில் Save, Undo, மற்றும் Repeat ஆகிய வசதிகள் காணப்படும். ஆனால், நீங்கள் Customize Quick Access Toolbar அம்புக் குறி மீது கிளிக் செய்து, கூடுதல் வசதிகளைப் பெறலாம். இந்த டூல்பாரில் கூடுதலாக ஒரு டூலைச் சேர்க்க, டூல்பார் பட்டியலில் அதன் மீது கிளிக் செய்திடவும். இன்னும் தெளிவாக இது குறித்து அறிய, More Commands என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது, வேர்ட் ஆப்ஷன்ஸ் பாக்ஸில், Quick Access Toolbar category கிடைக்கும். இதில், நீங்கள் அப்போது அமைத்துக் கொண்டிருக்கும் டாகுமெண்ட்டில் மட்டும் பயன்படுத்த இந்த டூல் தேவையா, அல்லது எப்போதும் தேவையா என்பதனை அமைக்க வேண்டும். மேலும் இந்த மாற்றத்தினை மற்ற கம்ப்யூட்டர்களுக்கும் எடுத்துச் செல்ல விரும்பினால், அதற்கான

Microsoft Office 2010

ஆப்ஷனும் இதில் தரப்பட்டுள்ளது.

2.ரிப்பனில் உங்களின் டேப் மற்றும் குரூப்களை இணைக்க: வேர்ட் 2007 தொகுப்பு வந்த பின், இந்த இணைக்கும் வசதியினைத்தான் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்திருப்போம். வேர்ட் 2010ல் நாம் விரும்பும் டேப்களை ரிப்பனில் இணைக்க முடியும். இவற்றை டேப் குழுக்களாகவும் அமைக்கலாம்.

ஒரு புதிய டேப் குரூப்பினை (tab group) இணைக்க File tab மீது கிளிக் செய்திடவும்.பின்னர் இதில் Options கிளிக் செய்க. இதற்குப் பின், Customize Ribbon என்பதில் கிளிக் செய்திடவும். உடனடியாக, வேர்ட், புதிய டேப் குரூப் ஒன்றை இணைத்திடும். நீங்கள் தேர்ந்தெடுத்த டேப்பிற்கு அடுத்தபடியாக இது அமைக்கப்படும். இந்த டயலாக் பாக்ஸிற்கு வலது பக்கத்தில், உள்ள New Tab என்பதில் கிளிக் செய்திடவும். இனி, இந்த டேப்பின் பெயரை மாற்றலாம்; இணைக்கலாம்; குழுப் பெயரும் கொடுக்கலாம்.

அடுத்து, இந்த குரூப்பில் நீங்கள் விருப்பப்படும் டூல்களை இழுத்து வந்து இதில் விட்டுவிடலாம். அனைத்தும் முடிந்த பின்னர், ஓகே கிளிக் செய்து, மாற்றங்களை சேவ் செய்துவிடலாம்.

3.வேர்ட் வண்ணக் கட்டமைப்பினை மாற்ற: வேர்ட் தொகுப்பின் கட்டமைப்பில், நம் இஷ்டப்படி, வண்ணக் கலவை அமைக்கும் வகையில் வழிகள் இல்லை. இருந்தாலும், மாறா நிலையில் வரும், அந்த ஸ்டீல் கிரே வண்ணத்தினை மாற்றி அமைக்கலாம். மாற்றப்படும் வண்ணம் நீல நிறமாகவோ, திரிந்த கருப்பு நிறமாகவோ இருக்கலாம்.

வண்ண அமைப்பு கட்டம் ரிப்பன், டைட்டில் பார் மற்றும் நம் திரையில் உள்ள டெஸ்க்டாப் சுற்று வட்டத்தில் தெரியவரும். மாறா நிலையில் வேர்ட் 2010 தொகுப்பு, கிரே கலர் கட்டமைப்பைப் பயன்படுத்து கிறது. இருப்பினும் சில மாற்றங்களை நாம் இதில்

மேற்கொள்ளலாம்.

ரிப்பனில், இன்னும் சற்று கூடுதலாக வெண்மையைக் கொண்டு வரலாம்; சில டுல்ஸ் மற்றும் ஆப்ஷன் களில், பளிச் என்ற நிலையையும், சில டுல்களின் பார்டர்களில் வண்ணக் கலவையையும் கொண்டு வரலாம். வண்ணங்களை இணைக்கையில் வேறுபட்ட வண்ணங்கள் இருந்தால் தான், உங்களால் நன்றாகப் பார்த்துப் படிக்க முடியும் என்றால், அந்தக் கலவையில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கு ஏற்படுத்தும் வண்ண மாற்றங்கள், அனைத்து ஆபீஸ் தொகுப்புகளிலும் ஏற்படுத்தப்படும். எனவே இங்கே மாற்றிவிட்டு, அடுத்து அவுட்லுக் செல்கையில் அங்கேயும் இந்த மாற்றங்கள் இருந்தால், ஆச்சரியப்படாதீர்கள்.

4. டாகுமெண்ட் ப்ராப்பர்ட்டீஸில் கூடுதல் வசதிகள்: வேர்ட் 2010ல் தரப்பட்டுள்ள புதிய வசதியான Backstage வியூ , நம் பைலுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் பெற உதவிடுகிறது. உங்களுடைய குழுவில் உள்ள மற்றவர்கள், இந்த டாகுமெண்ட்டைப் பார்த்திருந்தால், எடிட் செய்திருந்தால், அதனை அறிந்து கொள்ள முடிகிறது. File டேப் கிளிக் செய்து, அதில் Info தேர்ந்தெடுத்தால், இந்த தகவல்களைப் பெறலாம். வலது புறம் உள்ள பிரிவில் இவை காட்டப்படுகின்றன. இந்த ப்ராப்பர்ட்டீஸ் தகவல்களை, ஒரு டாகுமெண்ட் பேனலில் (Document Panel) இணைத்துக் கொள்ளவும் இங்கு வசதி தரப்பட்டுள்ளது.

5.அடிக்கடி டைப் செய்திட வேண்டுமா? சில வாக்கியங்களை நாம் ஒவ்வொரு டாகுமெண்ட்டிலும் அமைப்போம். ஒரு மையத்தின் நோக்கத்தினை விளக்கும் வாக்கியம், ஒரு நிறுவனத்தின் முழு பெரிய பெயர், முகவரிகள், முடிக்கும் சொற்கள் என எத்தனையோ விஷயங்களை, ஓராண்டில் எத்தனை முறை நாம் உருவாக்கும் டாகுமெண்ட்களில் அமைக்க வேண்டியதிருக்கும்? ஏன் ஒவ்வொரு முறையும் டைப் செய்து நம் நேரத்தினையும், உழைப்பையும் செலவழிக்க வேண்டும். அது மட்டுமின்றி, இவற்றைக் குறிப்பிட்ட ஒரு எழுத்துவகையில் தான் அமைக்க விரும்புவோம். இதற்கும் கூடுதலாக சில நிமிடங்கள் ஆகலாம். இவற்றை ஏதேனும் ஒரு வழியில் அமைத்து, நேரம், உழைப்பு வீணாகாமல் அமைக்க முடியுமா? நாமே, நம்முடைய Quick Parts என்ற பகுதியை உருவாக்கி, இவற்றை அமைத்து, நொடியில் பயன்படுத்தலாம்.

இதற்கு முதலில் என்ன வாக்கியங்கள், எந்த எழுத்துவகையில், என்ன ஸ்டைலில் அமைக்க முடியுமோ, அதனை உருவாக்கி வைத்துக் கொள்ளவும். பின்னர், அதனைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து Insert டேப்பினைத் தேர்ந்தெடுத்து, கிடைக்கும் பட்டியலில், Quick Parts என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு கிடைக்கும் பட்டியலில் கீழாக உள்ள Save Selection To Quick Part Gallery என்பதில் கிளிக் செய்திடவும். இறுதியாக Create New Building Block என்ற டயலாக் பாக்ஸில், இந்த Quick Parts –க்கு ஒரு பெயர் சூட்டவும். எந்த கேலரியில் இது இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதனையும் குறிப்பிடவும். மேலும் பிற தேவைகளையும் தேர்ந்தெடுத்து அமைக்கவும். பின்னர், இறுதியாக ஓகே, கிளிக் செய்து முடவும்.

6. மாறா நிலை போல்டரை அமைக்க: புதிய பைல் ஒன்றை

"கவனத்திற்கு"

Software: (சாப்ட்வேர்) ஹார்ட்வேர் எனக் கூறப்படும் சாதனங்களை இயக்கும் கம்ப்யூட்டர் புரோகிராம்கள் அல்லது புரோகிராம்களின் தொகுப்பு என இதனைக் கூறலாம். ஆப்பரேட்டிங் சிஸ்டம் புரோகிராம், சாப்ட்வேர் அப்ளிகேஷன்கள் (எம்.எஸ். ஆபீஸ், கேம்ஸ் போன்றவை) ஆகிய அனைத்தும் இந்த சொல்லால் குறிப்பிடப்படும்.

Thumbnail (தும்ப் நெயில்): பெரிய படத்தின் சிறிய தோற்றம். இதன் மூலம் பட பைலைத் திறக்காமலேயே அது என்ன படம் என அறிய முடியும்.

உருவாக்கும் ஒவ்வொரு வேளையும், அதனை எந்த போல்டரில் சேவ் செய்திட வேண்டும் என, அந்த போல்டரைத் தேர்ந்தெடுக்க விண்டோஸ் எக்ஸ்புளோரரில் அலைய வேண்டும். வேர்ட் 2010ல் எந்த போல்டரில் இவை சென்றடைய வேண்டும் என்பதனை, வரையறை செய்து மாற்றலாம்.

மாறா நிலையில் தரப்பட்டிருக்கும் போல்டரை மாற்ற, File டேப்பில் கிளீ செய்து Options தேர்ந்தெடுக்கவும். அடுத்து கிடைக்கும் Word Options டயலாக் பாக்ஸில், Word Options என்பதைக் கிளிக் செய்திடவும். அடுத்து Default File Location என்ற பில்டில் கிளிக் செய்து, நீங்கள் விரும்பும் போல்டருக்கான டைரக்டரி வழியை (Path) டைப் செய்திடவும். இப்படியே ஒவ்வொரு வகை டாகுமெண்ட்டிற்கும் அமைத்து, இறுதியில் ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இதில் ஆன்லைன் சர்வரில் உள்ள ட்ரைவில் கூட சேவ் செய்திடும் படி அமைக்கலாம். ஆனால், இன்டர்நெட் இணைப்பில் உங்கள் கம்ப்யூட்டர் அப்போது இயங்க வேண்டும்.

7. உங்கள் திட்டப்படி பக்க வடிவம்: வர்த்தக அலுவலகங்கள், கல்வி மையங்கள் என ஒவ்வொரு வகை டாகுமெண்ட்டிற்கும், ஒரு வகையில் அதன் பக்கங்கள் இருக்க வேண்டும் என நாம் விரும்புவோம். ஒன்றில் மார்ஜின் இடைவெளி அதிகமாக, அதில் குறிப்புகள் எழுத இடம் இருக்கும்படி அமைக்க வேண்டும். இன்னொன்றில், பிரிண்ட் இடம் நான்கு பக்கங்களிலும் சற்று கூடுதலாக இருக்க விரும்புவோம். இது போல நம் விருப்பப்படி பக்கங்களை அமைக்க வேர்ட் 2010 உதவுகிறது.

இதற்கு, Page Setup டயலாக் பாக்ஸை முதலில் கொண்டு வரவும். அதில் நீங்கள் விரும்பும் வகையில் பக்க அகலம், உயரம், நீளம் ஆகியவற்றை செட் செய்திடவும். பின்னர், Set As Default என்பதில் கிளிக் செய்திடவும். இந்த இடத்தில், உங்களுக்கு ஒரு செய்தி காட்டப்படும். நீங்கள் தொடர்ந்து செயல்பட விரும்புகிறீர்களா? என்று கேட்கப்படும். ஏனென்றால், இந்த மாற்றங்கள் Normal.dot என்ற டெம்ப்ளேட் பைலில் மாற்றப்பட்டு அமைக்கப்படும். நிலையாக இந்த அளவுகளில் பக்கங்கள் வேண்டும் எனில், Yes என்பதைக் கிளிக் செய்திடவும். அதுவே மாறா நிலையாக, புதிய அளவுகளில் பக்கமாக அமைக்கப் பட்டு, அந்த அளவுகளிலேயான பக்கம் உங்களுக்கு புதிய பைலில் காட்டப்படும்.

8. பிடித்த எழுத்துவகையை அமைக்க: ஒவ்வொரு வருக்கும் ஒரு குறிப்பிட்ட எழுத்துவகை (Font) யினைப் பிடிக்கும். எடுத்துக்காட்டாக, எனக்கு Calibri, Footlight, Palatino போன்ற மிதமான எழுத்து வகைகள் பிடிக்கும். ஒரு சிலருக்கு Times New Roman எழுத்துவகைதான் வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பார்கள். எது ஒருவருக்குப் பிடித்திருந்தாலும், அவர் கம்ப்யூட்டரில், வேர்ட் 2010 தொகுப்பில் அதனை, மாறா நிலை எழுத்துவகையாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இதற்கு Manage Styles என்ற டயலாக் பாக்ஸ் செல்லவும். Set Defaults என்ற டேப்பில் கிளிக் செய்திடவும். பின்னர் Font, Size, Color, Position, Line Spacing, and Paragraph Spacing ஆகியவற்றில், நீங்கள் விரும்பும் அளவில் செட் செய்திடவும். பின்னர் ஓகே கிளிக் செய்து இவற்றை சேவ் செய்திடவும். இனி, நீங்கள் தேர்ந்தெடுத்த எழுத்துவகை, செட் செய்யப்பட்ட அளவில், வண்ணத்தில் கிடைக்கும்.

"கவனத்திற்கு"

Wall Paper (வால்பேப்பர்): விண்டோஸ் டெஸ்க் டாப்பிற்கு பேக் கிரவுண்ட் படமாகப் பயன்படுத்தப்படும் இமேஜ். இதன் மூலம் கம்ப்யூட்டர் சொந்தக்காரர் எப்படிப்பட்ட ரசனை உள்ளவர் என அறியலாம். இதில் நிலையான படங்கள் மட்டுமின்றி அசையும் அனிமேஷன் படங்களும் உள்ளன.

Dialogue Box (டயலாக் பாக்ஸ்): கம்ப்யூட்டர் பயன்பாட்டின் போது நம்மிடம் இருந்து தகவல்களைப் பெற்று இயங்க விண்டோஸ் இயக்கத்தில் எழுந்து வரும் ஒரு தகவல் கேட்பு கட்டம். தேவைப்படும் தகவல்களைத் தர இதில் தயாராக படிவம் போல வடிவமைக்கப்பட்டிருக்கும்.

எந்த இடத்திலும் இன்டர்நெட்

இன்டர்நெட் இணைப்பினை எளிதாக எந்த இடத்திலும் மேற்கொள்ளலாம். இதற்கென பல நிறுவனங்கள், டேட்டா நெட் கார்ட்களை விற்பனை செய்கின்றன. சிலர் இதனை இன்டர்நெட் டாங்கிள் எனவும் அழைக்கின்றனர். சற்றுப் பெரிய ப்ளாஷ் மெமரி ஸ்டிக் போலத் தோற்றமளிக்கும் இவற்றை, எந்தக் கம்ப்யூட்டரிலும் (டெஸ்க்டாப், லேப்டாப், நெட்புக் போன்றவை) இணைத்து, இன்டர்நெட்டில் உலா வரலாம். பயன்படுத்திக் கொண்டிருக்கும் கம்ப்யூட்டரில் உள்ள நெட்வொர்க் இணைப்பினைச் சிரமப்படுத்த வேண்டியதில்லை.

இது போன்ற இன்டர்நெட் இணைப்புகளால், நாம் அலுவல் காரணமாக வெளியூர்களுக்குச் செல்கையில் அங்கு இருக்கும் கம்ப்யூட்டர்களில் அல்லது நம் லேப்டாப்பில் இந்த டேட்டா கார்ட்களை இணைத்துப் பயன்படுத்த முடிகிறது.

இருந்தாலும், சில வேளைகளிலும் இவையும் நம் காலை வாரிவிடுகின்றன. இணைப்பு தராமல்,ஏதாவது ஒரு எர்ரர் குறியீட்டினைக் காட்டிவிட்டு, தொடர முடியாமல் உறைந்து விடுகின்றன. இதனால் நம் வேலைகள் தடைபடுகின்றன.

இது போன்ற சூழ்நிலைகள் உருவாகாமல் இருக்க நாம் என்ன மாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்.

1. மொபைல் இன்டர்நெட்டுக்கு ஒரே நிறுவனமா? எப்போதும் இன்டர்நெட் இணைப்பு பெற, குறிப்பாக, நாம் செல்லும் இடங்களில் எல்லாம் இன்டர்நெட் இணைப்பு பெற, ஒரே நிறுவனத்தின் இன்டர்நெட் இணைப்பு கார்ட் அல்லது அட்டையை நம்ப வேண்டாம். நீங்கள் வாங்கியுள்ள இணைப்பு ட்ரைவினைத் தந்த நிறுவனத்தின் இன்டர்நெட் தொடர்பு, நீங்கள் வசிக்கும் நகரில் நல்ல வேகத்தில் கிடைக்கலாம். ஆனால், மற்ற

நகரங்களில் அந்த நிறுவனத்தின் டவர்கள் சரியான திறன் கொண்டு இயங்காததால், வேகத்தில் தடைபடலாம். சென்னையில் சரியாக இயங்கும் ஒரு நெட்வொர்க் கார்ட், டில்லியில் அல்லது மதுரையில் பாதி அளவு மட்டுமே வேகம் தரலாம்; அல்லது அந்த நகரிலிருந்து சிறிது தொலைவு தள்ளிப் போனால், இயங்காமலேயே இருக்கலாம். எனவே ஒன்றுக்கு இரண்டாக நெட்வொர்க் கார்டுகளை, வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து வாங்கிப் பயன்படுத்துவது நல்லது.

2.குறைந்த வேக மொபைல் இன்டர்நெட் இணைப்பு: உங்கள் மொபைல் போனில் இன்டர்நெட் இணைப்பு பெற்று பயன்படுத்து பவர்களுக்கு வித்தியாசமான பிரச்னை உண்டாகலாம். உங்கள் மொபைல் போனில் இன்டர்நெட் இணைப்பிற்கான ஐகானில் ஐந்து கட்டங்களும் நிறைவு பெற்று, சிக்னல் மிக ஸ்ட்ராங்காக இருப்பதாகக் காட்டப்படலாம். ஆனால் டேட்டா மிக மெதுவாக, நம் பொறுமையைச் சோதிக்கும் வகையில் கிடைக்கும். இதில் என்ன சிக்கல் என்றால், உங்கள் மொபைல் போனுக்கும் அருகில் உள்ள அதன் டவருக்கும் சிக்னல் பரிமாற்றம் மிக வேகமாக உள்ளது. ஆனால் அந்த சிக்னல் டவரினை அதிகம் பேர் பயன்படுத்துவதால், டேட்டா மிக மெதுவாகக் கிடைக்கிறது. எனவே உடனே இன்டர்நெட் இணைப்பு வேண்டும் என்றால், உங்கள் இடத்தை மாற்றிப் பார்க்க வேண்டும். சில வேளைகளில், சிக்னல் பரிமாற்றம் மிக மோசமாக இருக்கும்; ஆனால் டேட்டா வரத்து வேகமாக இருக்கும். இதற்குக் காரணம், உங்கள் சிக்னல் டவரைக் குறைந்த இணைப்புகளே பயன்படுத்துவதால் தான்.

3. விடுதிகளில் வை-பி: பல சாதாரண விடுதிகள் கூட, இப்போதெல்லாம் அவர்கள் விடுதி முழுவதையும் வை-பி செய்திருப்பதாக விளம்பரம் செய்கின்றனர். தங்கும் அனைவரும் இன்டர்நெட் இணைப்பு வேண்டுவதால், இந்த வசதி தரும் விடுதிகளுக்கு முன்னுரிமை தருகின்றனர். அங்கு போன பின்னரே, நீங்கள் எதிர்பார்க்கும் வேகத்தில் அந்த வை-பி வேலை செய்திடவில்லை என்பது. எனவே, நாமே நம்முடைய வை-பி ரௌட்டரைக் கொண்டு செல்ல வேண்டும். ஈதர்நெட் இணைப்பினை வயர்வழி இணைத்திருக்கும் அறையைக் கேட்டு வாங்கி, அங்கு இவற்றைப் பயன்படுத்த வேண்டும். இது போன்ற வசதிகளை மேற்கொள்கையில், நீளமான இணைப்பு தரும் கேபிள்களைக் கையுடன் கொண்டு செல்லுங்கள். அறைகளில் உள்ள ஈதர்நெட் இணைப்பு மிகக் குறைவான நீளமுள்ள கேபிளைக் கொண்டிருக்கும். நீங்களோ படுக்கையில் வைத்து லேப்டாப்பில் இன்டர்நெட் இணைப்பினை மேற்கொள்ள எண்ணுவீர்கள். அதற்காகவே இந்த ஏற்பாடு.

4.இன்டர்நெட் வேகத்தை உறுதி செய்திடுங்கள்: நம் வர்த்தகம் மற்றும் அலுவலகப் பணிகளுக்காக, பெரிய அளவிலான பைல்களை அப்லோட் செய்திட வேண்டிய திருக்கும். இன்டர்நெட் இணைப்புதான் உள்ளதே என்று, பைல்களை அப்லோட் செய்திட முனைந்தால், அப்லோட் செய்திடும் நேரத்தில் நாமே நம் அலுவலகத்திற்குச் சென்று திரும்பலாம் போலத் தோன்றும். எனவே, பைல்களை அப்லோட் செய்திடும் முன், கிடைக்கும் இன்டர்நெட் இணைப்பினை ஒருமுறை சோதனை செய்திடவும்.

5. பாதுகாப்பினைப் பயன்படுத்தவும்: திறந்த வெளியில் வை-பி இணைப்பு கிடைக்கிறதா? சற்று கவனத்துடன் பாதுகாப்பாகச் செயல்படவும். ஹாட்ஸ்பாட் ஷில்ட் (Hotspot Shield) போன்ற பயன்பாட்டு புரோகிராம் களைப் பயன்படுத்தினால் உங்கள் மெயில் மற்றும் தனிநபர் தகவல்களைப் பாதுகாப்பாகக் கையாளலாம். இதனை எல்லாம், இன்டர்நெட் இணைப்பினை வை-பி மூலம் பெறும் முன்னர் ஏற்பாடு செய்து கொண்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

6.கிளவ்ட் இணைப்பினைத் தள்ளி வைக்கலாம்: கிளவுட் கம்ப்யூட்டிங் முறை வெகு வேகமாகப் பரவி வருகிறது. பல நிறுவனங்கள் தங்கள் டிஜிட்டல் செலவுகளைக் குறைத்திட இந்த முறைக்குத் தாவி வருகின்றனர். இது போன்ற சூழ்நிலையில், நீங்கள் உருவாக்கும் அனைத்து டாகுமெண்ட்களுக்கும் உங்களுடைய நகல் ஒன்றை, உங்கள் கம்ப்யூட்டரில் சேவ் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அதே போல கிளவ்ட் கம்ப்யூட்டிங் சர்வரில் இணைக்கப்படாமலேயே, அலுவலகப் பணிகளை மேற்கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.

7.பயணத்திட்டத்தில் இன்டர்நெட்: பயணம் ஒன்றை, அலுவலகப் பணிகளுக்கோ, குடும்பத்தினருடனோ அல்லது தனி நபர் சந்தோஷத்திற்காகவோ, மேற் கொள்ளத் திட்டமிடுகையில், மாத்திரைகள், பெர்சனல் ஆடை, உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் அளித்து தயார் செய்வது போல, இன்டர்நெட் இணைப்பினையும் உறுதி செய்து கொள்ளுங்கள். வெளியூர்களில் உறவினர் அல்லது நண்பர் வீடுகளில் தங்கினாலும், விடுதிகளில் தங்கினாலும் அங்கு இன்டர்நெட் இணைப்பு கிடைக்குமா என்று உறுதிப்படுத்திக் கொள்ளவும். அது போன்ற விடுதிகளிலேயே அறைகளை முன்பதிவு செய்திடவும். உங்களுடன் இன்டர்நெட் இணைப்பு தரும், பழகிய நிறுவனத்தின் டேட்டா கார்டுகளை எடுத்துச் செல்லவும்.

வேர்ட் தொகுப்பில் சில சுருக்கு வழிகள்

Alt + F10 - விண்டோவினை அதன் முழு அளவிற்கு மாற்றுகிறது

Alt + F5 - விண்டோவினை பழைய வழக்கமான நிலைக்குக் கொண்டு வரும்.

Ctrl + Shift + A தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட் முழுவதையும் கேப்பிடல் எழுத்துக்களாக மாற்றுகிறது. இதனை Shift+F3 என்ற கீகளும் மேற்கொள்ளும்.

Shift + F2 - தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட்டை கிளிப் போர்டுக்குக் கொண்டு செல்லாமல் காப்பி செய்கிறது. காப்பி செய்ததனை பேஸ்ட் செய்திட என்டர் அழுத்தினால் போதும்.

Ctrl+ Backspace பின்புறமாக ஒரு சொல்லை அழித்திடும். ஆனால் இது காப்பி செய்யப்பட மாட்டாது.

Ctrl+W, Ctrl+F4 - இந்த இரண்டு கீ இணைப்புகளும் அப்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் பைலை சேவ் செய்திடவா என்று ஒரு டயலாக் பாக்ஸ் மூலம் கேட்டுவிட்டு பின் அழுத்தும் கட்டத்திற்கேற்றபடி பைலை மூடும்.

Alt + Ctrl + S - பணியாற்றிக் கொண்டிருக்கும் விண்டோவினை படுக்கை வாக்கில் பிரிக்கும் கோடு கிடைக்கும். பின் அந்த கோட்டினை நகர்த்தி விண்டோவைப் பிரித்துப் பயன்படுத்தலாம்.

Ctrl + Shift + D - தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட்டின் கீழாக இரு கோடுகள் இடப்படும். இதனை நீக்குவதற்கு மீண்டும் இதே கீகளைப் பயன்படுத்தலாம்.

F5 அல்லது Ctrl+G - செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆவணத்தில் குறிப்பிட்ட பக்கத்திற்குச் செல்ல இந்த கீகளைப் பயன்படுத்தலாம்.

Ctrl+H - ஒரு குறிப்பிட்ட டெக்ஸ்ட்டைக் கண்டுபிடித்து அதற்குப் பதிலாக நாம் தேர்ந்தெடுக்கும் அல்லது அமைக்கும் டெக்ஸ்ட்டை ஒட்டும்.

Ctrl+F2 - அனைத்து பக்கங்களின் அச்சு தோற்றத்தைக் காட்டும்.

Alt F, I - பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆவணத்தின் பிராபர்ட்டீஸ் பார்க்க இந்த கீகளை வரிசையாக அழுத்தவும்.

Shift + F5 - ஆவணத்தில் முன்பு டெக்ஸ்ட்டை செருகிய இடத்திற்கு உங்கள் கர்சரை எடுத்துச் செல்லும். இது போல மூன்று முந்தைய இடத்திற்கு எடுத்துச் செல்லும். அதன்பின் மீண்டும் பழைய இடத்திற்கு வந்துவிடும். இது மிகவும் பயனுள்ள ஒரு ஷார்ட் கட். இதனால் ஒரு ஆவணத்தைத் திறந்திடுகையில் அதனை முன்பு பயன்படுத்துகையில் எந்த இடத்தில் எடிட் செய்து கொண்டிருந்தீர்களோ அந்த இடத்திற்கு இந்த கீகளைப் பயன்படுத்திச் சென்று விடலாம்.

வேர்ட் டிப்ஸ்

வேர்ட் டேபிளில் ஹெடர்கள்

வேர்ட் தொகுப்பில் டேபிள் ஒன்றை உருவாக்கு கிறீர்கள். அதனை பிரிண்ட் எடுக்க முயற்சிக்கையில் அது பல பக்கங்களில் அமைந்திருப்பதனையும் அடுத்த அடுத்த பக்கங்களில் டேபிளில் உள்ள வரிசைகளுக்கான தலைப்புகள் இல்லை என்பதனையும் உணர்கிறீர்கள். ஒவ்வொரு பக்கத்திலும் ஹெடர்கள் வந்தால் தானே ஒவ்வொரு காலமும் எது குறித்த தகவல்களைக் கொண்டுள்ளன என்று எளிதாகத் தெரியும். உடனே முதல் பக்கத்தில் இருக்கும் டேபிள் தலைப்பு உள்ள படுக்கை வரிசையினை அப்படியே காப்பி செய்து ஒவ்வொரு பக்கத்தின் முதல் வரிசையிலும் புதிய வரிசையினை ஏற்படுத்தி பேஸ்ட் செய்திடலாம். ஆனால் இது இன்னும் பிரச்னையை ஏற்படுத்தும். பின்னாளில் ஏதேனும் ஒரு வரிசையை இணைத்தாலோ அல்லது நீக்கினாலோ இரண்டாம் பக்கத்திலிருந்து உள்ள தலைப்பு அடுத்த பக்கத்திற்கோ அல்லது முந்தைய பக்கத்திற்கோ செல்லும். இந்த குழப்பத்தினைச் சரி செய்திட ஒரு வழியினை வேர்ட் தருகிறது. இதற்கான தீர்வினை Headings என்ற பகுதியில் பெறலாம். ஆம்; முதலில் முதல் பக்கத்தில் டேபிள் தலைப்பு அமைத்த வரிசையினை செலக்ட் செய்திடவும். பின் Table மெனு செல்லவும். விரியும் மெனுவில் கிடைக்கும் பிரிவுகளில் Heading Rows Repeat choice என்ற பிரிவினைக் கிளிக் செய்திடவும். பழைய வேர்ட் தொகுப்பாக இருந்தால் Headings என்று மட்டுமே இருக்கும். இனி பார்த்தால் ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் இந்த ஹெடர்கள் இருக்கும். நீங்கள் எத்தனை வரிசையினை சேர்த்தாலும் நீக்கினாலும் இது அப்படியே தான் இருக்கும். இந்த ஹெடர்களில் மாற்றம் செய்திட வேண்டும் எனத் திட்டமிட்டால் முதல் பக்கத்தில் உள்ள தலைப்பு வரிசையில் மட்டுமே மாற்ற முடியும். இரண்டாவது பக்கத்திலோ அல்லது வேறு பக்கத்திலோ உள்ள ஹெடரில் மாற்ற முடியாது. மேலும் முதல் பக்கத்தில் என்ன மாறுதல் செய்கிறோமோ அது மற்ற பக்கத்திலும் அப்படியே மாற்றப்படும்.

வேர்ட் டேபிள் செல்களுக்கிடையே இடைவெளி

வேர்டில் டேபிள் உருவாக்கி தகவல்களை அமைக்கும் வசதியில் பல நகாசு வேலைகளை மேற்கொள்ளலாம். அவற்றில் ஒன்று செல்களுக் கிடையே சிறிய இடைவெளியை உருவாக்குவது. இது செல்களையும், அவற்றின் வரிசைகளையும் அழகாக எடுத்துக்காட்டும். இதற்கு டேபிள் எடிட்டர் ஒன்றை வேர்ட் கொண்டுள்ளது. பொதுவாக டேபிள் ஒன்றை உருவாக்குகையில், செல்களுக்கிடையே இடைவெளி எதுவும் ஏற்படுத்தப்பட மாட்டாது. செல்களைப் பிரிக்கும் கட்ட கோடு மட்டுமே காட்டப்படும். இதனையும் வேண்டாம் என்றால், மறைத்துவிடலாம். எனவே செல்களுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்த நாம் அதனுடன் வரும் டேபிள் எடிட்டரைப் பயன்படுத்த வேண்டும்.

1. முதலில் வடிவத்தினை மாற்ற எண்ணும் டேபிளில் எங்கேனும் ரைட் கிளிக் செய்திடவும். வேர்ட் Context மெனுவினைக் காட்டும்.

2.இந்த மெனுவில் Table Properties என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் உடனே, Table Properties டயலாக் பாக்ஸைக் காட்டும்.

3. இதில் Table டேப் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்திடவும்.

4. இந்த டயலாக் பாக்ஸின் கீழாக உள்ள Options என்ற பட்டனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் Table Options டயலாக் பாக்ஸைக் காட்டும்.

5. இதில் Allow Spacing Between Cells என்ற செக் பாக்ஸில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும்.

6. இந்த செக் பாக்ஸின் வலது பக்கம், செல்களுக்கிடையே எவ்வளவு இடம் விடப்பட வேண்டும் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

7. அடுத்து Table Options டயலாக் பாக்ஸை மூட ஓகே கிளிக் செய்திடவும்.

8. பின்னர், Table Properties டயலாக் பாக்ஸை மூடுவதற்கான ஓகே பட்டனைக் கிளிக் செய்திடவும்.

அடிக்கோடுகள் சலிப்பாக இருக்கின்றனவா?

வேர்ட் டாகுமெண்ட்டில், சில சொற்களை மற்ற சொற்களிலிருந்து பிரித்துக் காட்ட, எழுத்துக்களை தடிமனாக, சாய்வாக மற்றும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறோம். இவற்றை முறையே CTRL +B, CTRL +I மற்றும் CTRL +U கீகளை அழுத்தி அமைக்கிறோம். இதில் கோடு எப்போதும் ஒரு அளவில் அமைக்கப் படுகிறது.

பல வேளைகளில், இந்தக் கோடு அமைவது நமக்குச் சலிப்பினைத் தருகிறது. ஏனென்றால், நம்மில் பலருக்கு, இன்னும் பலவகையான கோடுகளை அமைக்க வேர்ட் வசதிகளைத் தருகிறது என்பதனை அறியாமல் இருக்கிறோம். புள்ளிகள், டேஷ் கோடுகள், இரட்டை கோடுகள், அலை அலையாய் கோடுகள் ஆகியவற்றைக் கொண்டும் அடிக்கோடிடலாம். எப்படி அவற்றை அமைப்பது எனப் பார்க்கலாம்.

1. எந்த சொற்களுக்கு அடிக்கோடிட வேண்டுமோ, அவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

2. அடுத்து "Font" dialog box திறக்கவும். "Home" டேப்பினை ரிப்பனில் தேர்ந்தெடுத்து இதனை மேற்கொள்ளலாம். பின்னர், வலது கீழாக உள்ள அம்புக்குறியினைக் கிளிக் செய்திடவும். அல்லது CTRL + SHIFT + F ஆகிய கீகளை ஒருசேர அழுத்தவும்.

3. இப்போது "Font" டயலாக பாக்ஸ் கிடைக்கும். உங்கள் விருப்பப்படி, "Underline style" என்பதனை அடுத்துள்ள டெக்ஸ்ட் பாக்ஸை விரிக்கவும். இங்கு நீங்கள் விரும்பும் வகையிலான அடிக்கோடு அமைக்க பல ஆப்ஷன்கள் கிடைக்கும். அவற்றிலிருந்து தேவையானதைத் தேர்ந்தெடுத்து அமைக்கலாம். இதே போல "Underline color" என்பதனைத் தேர்ந்தெடுத்து, அதற்கான வண்ணத்தையும் அமைக்கலாம். இதில் காட்டப்படும் வண்ணம் எதுவும் உங்களுக்கு மன நிறைவைத் தரவில்லை என்றால், "More Colors" என்பதில் கிளிக் செய்து மேலும் பல வண்ணங்களைப் பெற்று, தேர்ந்தெடுக்கலாம்.

4. பின்னர் ஓகே கிளிக் செய்து, டயலாக் பாக்ஸை மூடி வெளியேறலாம். இனி, நீங்கள் செட் செய்தபடி, அடிக்கோடுகள் கிடைக்கும்.

எத்தனை முறை திருத்தப்பட்டாய்?

உங்கள் வேர்ட் டாகுமெண்ட் எத்தனை முறை திறந்து திருத்தப்பட்டது என அறிய வேண்டுமா? இதனை சிறிய பில்டு ஒன்றை, டாகுமெண்ட்டில் ஏற்படுத்துவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு முறை, நாம் வேர்ட் டாகுமெண்ட்டினைத் திறந்து, எடிட் செய்து, சேவ் செய்திடுகையில், டாகுமெண்ட் ப்ராப்பர்டீஸ் பகுதியில் இந்த தகவல் அப்டேட் செய்யப்படுகிறது. இதில் ஒரு பகுதிதான், பைல் எத்தனை முறை சேவ் செய்யப்படுகிறது என்பதாகும். இதனை Revision Number என அழைக்கின்றனர். நீங்கள் விரும்பினால், நீங்களாகக் கூட இந்த எண்ணை பீல்டில் அமைத்து, ஒவ்வொரு முறையும் அதனை அப்டேட் செய்திடலாம். கீழ்க்காணும் செயல்பாட்டினை மேற்கொள்ளவும்.

1. எங்கு இந்த Revision Number வேண்டுமோ அங்கு கர்சரைக் கொண்டு சென்று வைக்கவும்.

2. Insert மெனுவிலிருந்து Field என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் Field டயலாக் பாக்ஸைக் காட்டும். நீங்கள் வேர்ட் 2007 தொகுப்பினைப் பயன்படுத்துவதாக இருந்தால், ரிப்பனில் உள்ள Insert டேப் காட்டப்படுவதனை உறுதி செய்திடவும். பின்னர், Text குரூப்பில், Quick Parts என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு தரப்படும் ஆப்ஷன்களில் Field என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.)

3. அடுத்து Categories என்ற பட்டியலில், Numbering என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட், Field Names பட்டியலில் இந்த ஆப்ஷன்களை அப்டேட் செய்து கொள்கிறது.

4. Field Names பட்டியலில் RevNum என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

5 .இதற்குப் பின்னர், தேர்வுகளை சேவ் செய்திட ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

இனி, பீல்ட் உருவாக்கப்பட்டு அங்கே,எத்தனை முறை, டாகுமெண்ட் திருத்தப்பட்டு சேவ் செய்யப் பட்டது என்பது எண்ணால் காட்டப்படும்.

பவர்பாய்ண்ட்: ஆப்ஜெக்ட், படங்களைச் சுழற்ற

பவர்பாய்ண்ட் ஸ்லைட் ஒன்றில் டெக்ஸ்ட்டுடன் ஆப்ஜெக்ட்கள் எனப்படும் கூடுதல் படங்கள், உருவங்களை வைக்கிறோம். இவற்றை நம் விருப்பப்படி சுழற்றி குறிப்பிட்ட கோணத்தில் வைக்க முயற்சிப்போம். ஆப்ஜெக்டைத் தேர்ந்தெடுத்து வலது புறமாகச் சாய்த்து வைக்க முயற்சிக்கையில், நாம் எதிர்பார்க்கும் வழியில் அமையாமல் அது செல்லலாம். இதனைத் தவிர்த்து நம் விருப்பப்படி அவற்றை அமைப்பதற்குத் தேவையான வழிகளை இங்கு காணலாம்.

"கவனத்திற்கு"

Taskbar (டாஸ்க்பார்): விண்டோஸ் இயக்கத்தில் மானிட்டர் திரையின் கீழாகக் காணப்படும் நீள பார். இதனை மறைத்தும் வைக்கலாம். அந்த இடத்தில் கர்சர் சென்றவுடன் தானாக எழுந்து வருமாறும் செட் செய்திடலாம். இதில் தான் ஸ்டார் பட்டன், குயிக் லாஞ்ச் ஏரியா, பயன்படுத்தப்படும் பைல்களுக் கான டேப்கள், பின்புலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் புரோகிராம்களின் ஐகான்கள், கடிகார நேரம் ஆகியவை காட்டப்படுகின்றன.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆப்ஜெக்டைச் சுழற்ற முயற்சிக்கையில், ஷிப்ட் (Shift) கீயை அழுத்தியவாறு இருந்தால், 15 டிகிரி அளவில் அவற்றைத் துல்லியமாகச் சுழற்ற முடியும்.

2. பார்மட் டேப்பில் Rotate in the Arrange group என்பதில் கிளிக் செய்தால், குறிப்பிட்ட நிலையில் சுழற்ற வழி கிடைகும். பவர்பாய்ண்ட் 2003ல், பிக்சர் டூல்பாரில் Rotate என்பதில் கிளிக் செய்தால், இந்த விளைவினை மேற்கொள்ளலாம்.

3. குறிப்பிட்ட ஆப்ஜெக்டை ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Format என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அல்லது பார்மட் டேப் தேர்ந்தெடுத்து, அதில் கிடைக்கும் Size group -ல், Dialog launcher என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு இடது புறம் உள்ள பிரிவில், Size மீது கிளிக் செய்திடவும். இதில் உள்ள Rotation control –ல், சுழலுவதற்கான எண் மதிப்பை(value)த் தரவும். இந்த வேல்யூ + ஆக இருந்தால், சுழற்சி கடிகார சுழற்சியில் இருக்கும். அதுவே - மதிப்பாக இருந்தால், சுழற்சி கடிகார சுழற்சியின் எதிர்புறமாக இருக்கும். இதனையே 0 ஆகக் கொள்கையில், ஆப்ஜெக்ட் அதன் பழைய நிலையில் தக்க வைக்கப்படும். (சுழலுவதற்கான ஹேண்டிலுடன் போராடுவதற்கு இதி எளிதல்லவா!). இத்துடன், எந்த அளவில் சுழற்சியை மேற்கொண்டாலும், அதனை நீக்க, [Ctrl]+Z கீகளை எப்போதும் அழுத்தலாம்.

4. மிர்ரர் இமேஜ் வேண்டும் எனில், ஆப்ஜெக்ட் மீது ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில், Format object என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு Size group -ல், Dialog launcher என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு 3-D Rotation என்பதனைத் தேர்ந்தெடுத்து, அதில் X மதிப்பை 180 எனத் தரவும். பின்னர் Close என்பதில் கிளிக் செய்தால், உடன் மிர்ரர் இமேஜ் கிடைக்கும்.

விரும்பும் அளவில் விண்டோ

விண்டோஸ் இயக்கத்தில், டெஸ்க் டாப் மீது உள்ள ஷார்ட்கட் ஐகான் மீது கிளிக் செய்தால், அதற்கான விண்டோ திறக்கப்படும் அளவு, மேக்ஸிமைஸ்/மினிமைஸ் அல்லது வழக்கம் போல நார்மல் என்ற மூன்றில் ஒன்றாக இருக்கும். அவ்வாறின்றி, அந்த ஐகானுக்கான புரோகிராம் விண்டோ ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருக்க வேண்டும் என்றால், அதனையும் செட் செய்துவிடலாம். அந்த ஐகான் மீது ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் ரைட் கிளிக் செய்திடுங்கள். திறக்கப்படும் கீழ் விரி மெனுவில் Properties மீது கிளிக் செய்திடுங்கள். பின்னர் கிடைக்கும் சிறிய விண்டோவில் Run என ஒரு பாக்ஸ் கிடைக்கும். இந்த பாக்ஸில் உள்ள கீழ் விரி அம்புக்குறியின் மீது கிளிக் செய்தால், மூன்று அளவும் ஆப்ஷனாகத் தரப்பட்டிருக்கும். இதில் நீங்கள் எந்த அளவிலான விண்டோவை விரும்புகிறீர்களோ, அதனைத் தேர்ந்தெடுத்து, ஓகே கிளிக் செய்து மூடவும்.

இனி, அந்த ஐகானைக் கிளிக் செய்து புரோகிராமினைத் திறக்கையில், திறக்கப்படும் விண்டோ நீங்கள் செட் செய்த அளவிலேயே திறக்கப்படும்.

ஹைப்பர் லிங்க் கொடுத்து, அதில் கிளிக் செய்து திறக்கப்படும் விண்டோக்களையும் ஒரே அளவில் அனைத்தையும் திறக்கும்படி செட் செய்திடலாம். ஏதேனும் ஒரு ஹைப்பர்லிங்க் செல்லவும். ஷிப்ட் கீயை அழுத்திக் கொண்டு, அதில் அழுத்தி, புதிய பக்கத்தினைத் திறக்கவும். இப்போது திறக்கப்பட்ட விண்டோவினை, உங்கள் விருப்பப்படி, மினிமைஸ் அல்லது மேக்ஸிமைஸ் செய்திடவும். தொடர்ந்து ஷிப்ட் கீயை அழுத்தியபடி வைத்தவாறே, அந்த விண்டோவினை File>close அல்லது close அழுத்தி மூடவும். வலது மூலையில் உள்ள X அழுத்தி மூட வேண்டாம். அடுத்து ஹைப்பர்லிங்க் திறக்கையில், இந்த அளவிலேயே விண்டோ திறக்கப்படும்.

தேசிய பிராட்பேண்ட் திட்டம்

தொலைபேசி (மொபைல் போன் உட்பட) தொடர்பு மிக வேகமாக வளர்ந்த அளவில் பாதி அளவு கூட, நம் நாட்டில் பிராட் பேண்ட் பயன்பாடு ஏற்படவில்லை. ஆனால் பொருளாதார வளர்ச்சிக்கும், இன்றைய உலகில் மற்ற நாடுகளுடன் போட்டி இட்டு வெற்றி பெறவும் தகவல் தொடர்பு மிக முக்கியம் என்பதால், அரசு பிராட்பேண்ட் பயன்பாட்டைத் தீவிரப்படுத்த, தேசிய பிராட்பேண்ட் திட்டம் ஒன்றை, சென்ற ஆண்டில் அறிவித்தது. பிராட்பேண்ட் இணைப்பு ஒரு கோடியே மூன்று லட்சமாக இருக்கையில், அதனை 16 கோடி வீடுகளுக்கு விஸ்தரிப்பதை இலக்காக அறிவித்தது. இதற்கான செலவு ரூ.60,000 கோடி என ட்ராய் (Telecom Regulatory Authority of India (TRAI)கணக்கிட்டுள்ளது. 6 கோடி வயர்லெஸ் பிராட்பேண்ட், 2.2 கோடி டி.எஸ்.எல். இணைப்பு, 7.8 கோடி கேபிள் இன்டர்நெட் இணைப்புகளை வரும் 2014 ஆம் ஆண்டிற்குள் தரும் வகையில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திலும் ஸ்டேட் ஆப்டிகல் பைபர் ஏஜென்சீஸ் State Optical Fiber Agencies அமைக்கப்படும். இவை மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும். இவற்றை இணைக்கும் வகையில் தேசிய ஆப்டிகல் பைபர் ஏஜென்சி National Optical Fiber Agency (NOFA)ஒன்று மத்திய அரசின் அமைப்பின் கீழ் இயங்கும்.

நகரங்களில் 10 Mbps வேகத்தில் இணைய இணைப்பு தரப்படும். இதற்கான உரிமங்களை ரிலையன்ஸ் மற்றும் குவால்காம் நிறுவனங்கள் பெற்றுள்ளன. இவை முறையே மும்பை மற்றும் குர்கவான் நகரங்களில் 4ஜி சேவையை சோதனை முறையில் வெற்றிகரமாக மேற்கொண் டன. இது வர்த்தக ரீதியில் 2012 ஆம் ஆண்டில் மக்களுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வகையில் சென்றால், பிராட்பேண்ட் பெரும் அளவில் மக்களிடையே பரவத் தொடங்கும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

அலகு, அடையாளம் மற்றும் எண்கள்

இரண்டு இதழ்களுக்கு முன் பைட்ஸ் அளவு குறித்து எழுதியது குறித்து ஒரு வாசகி, இவற்றிற்கு அடையாளம் ஏதேனும் உண்டா? எனக் கேட்டிருந்தார். அதாவது ரூபாய் என எழுதினாலும் அதற்கான அடையாள சிம்பல் ஒன்று உண்டல்லவா! அதே போல கிகா, மெகா போன்றவற்றிற்கான அடையாளம் உண்டா! மேலும் கிகா பைட்ஸ் என்றால் அதனை 1024 மெகா பிட்ஸ் எனக் கூறாமல் முழு எண்ணில் கூறவும் எனக் கேட்டுள்ளார். இதோ அவரின் கேள்விகளை மையமாக வைத்து மேற்கொண்ட தேடலில் கிடைத்த தகவல்கள்:

அலகு சொல், அடையாளம் மற்றும் அதற்கான எண் வரிசையாகத் தரப்படுகிறது.

1.yotta Y - 10^{24} =1 போட்டு 24 சைபர்

2.zetta Z - 10^{21} =1 போட்டு 21சைபர்

3.exa E- 10^{18} =1 போட்டு 18சைபர்

4.peta P - 10^{15} =1 போட்டு 15 சைபர்

5.tera T- 10^{12} =1 போட்டு 12சைபர்

6.giga G - 10^{9} =1 போட்டு 9 சைபர்

7.mega M - 10^{6} =1 போட்டு 6 சைபர்

8.kilo k - 10^{3} =1 போட்டு 3 சைபர்

9.hecto h - 10^{2} =1 போட்டு 2 சைபர்

10.deka da - 10^{1} =1 போட்டு 1 சைபர்

11.deci d - 10^{-1} =0.1

12.centi c - 10^{-2} =0.01

13.milli m - 10^{-3} =0.001

14.micro µ - 10^{-6} =0.000,001

15.nano n - 10^{-9} =0.000,000,001

16.pico p - 10^{-12} =0.000,000,000,001

17.femto f - 10^{-15} =0.000,000,000,000,001

18.atto a - 10^{-18} =0.000,000,000,000,000,001

19.zepto z - 10^{-21} =0.000,000,000,000,000,001

20.yocto z - 10^{-24} =0.000,000,000,000,000,000,001

மேலே கூறப்பட்டுள்ள அனைத்தும் மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் இல்லை என்றாலும் தெரிந்து கொள்வதில் தவறில்லை. இவை பயன்பாட்டுக்கு ஒரு நாளில் அனைத்து மக்களிடத்திலும் காணப்படலாம். இப்போதுதானே நாம் டெரா பைட் குறித்து பேசுகிறோம். கீழாகத் தரப்பட்டுள்ள கடைசி எட்டு அளவுகள், பெரும்பாலும் அறிவியல் ஆய்வு ஆவணங்களில் தான் பயன்படுத்தப்படுகின்றன.

ஸ்கைப் ஆட் ஆன் தொகுப்பு நீக்கம்

பயர்பாக்ஸ் பிரவுசரில் ஸ்கைப் இயங்கத் தரப்பட்ட ஆட் ஆன் தொகுப்பு, சென்ற வாரம் பெரிய பிரச்னையில் சிக்கியது. ஏறத்தாழ 40 ஆயிரம் பயனாளர்களிடம் பயர்பாக்ஸ் பிரவுசரைக் கிராஷ் செய்திட வைத்தது. இதனால், மொஸில்லா இந்த ஆட் ஆன் தொகுப்பின் இயக்கத்தினைத் தடை செய்தது. அத்துடன் அதனை பிளாக் லிஸ்ட் பட்டியலில் வைத்துவிட்டது. இருப்பினும் ஏற்கனவே இதனை இன்ஸ்டால் செய்து வைத்திருப்பவர்கள் பயன்படுத்த விரும்பினால், மொஸில்லா தரும் எச்சரிக்கையினைச் சந்தித்த பின்னர் தொடரலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 2008 ஆம் ஆண்டில் இதே போன்றதொரு பிரச்னை ஸ்கைப் டூல்பாரினால் ஏற்பட்டது. அப்போது இதே போல் பிளாக் லிஸ்ட் செய்யப்பட்டு, மீண்டும் அந்த ஆட் ஆன் தொகுப்பு சரி செய்யப்பட்டது. அதே போல இப்போதும் ஸ்கைப் டூல்பாரினைத் தயாரித்தவர்கள் மொஸில்லாவுடன் இணைந்து பேசி, அதனைச் சரி செய்திடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். டூல் பார் ஒன்றின் அனைத்து பதிப்புகளையும் மொத்த மாக ஒதுக்கி வைப்பது இப்போதுதான் நடந்துள்ளது எனவும், விரைவில் பிரச்னை சீரமைக்கப்படும் எனவும் மொஸில்லா அறிவித்துள்ளது.

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

டேப்ளட் பிசி குறித்த கட்டுரை நல்ல வழிகாட்டியாக உள்ளது. இறுதியில் யார் இதனை இப்போது வாங்கலாம் என்ற எச்சரிக்கை கலந்த தகவல், அனைவருக்கும் பயன்படும்.

-சா. குணசேகரன், மதுரை.

இப்போதைக்கு ஆர்வத்திற்காக அல்லது ஜஸ்ட் எங்கு சென்றாலும் எளிதான இன்டர்நெட் தொடர்புக்காக டேப்ளட் பிசியை வாங்கலாம். மற்றபடி, மக்கள் பயன்பாட்டிற்கு இது சரியானது என்று நிருபணம் ஆகிவிட்டால், நிச்சயம் நம் மக்கள் முதலில் மாறிவிடுவார்கள்.

-டாக்டர் ஆர். மாலதி, சென்னை.

இந்த வாரம் அரைப் பக்கத்தில் எக்ஸெல் டிப்ஸ்களைப் போட்டது போல, வாராவாரம் ஏதேனும் ஒரு அப்ளிகேஷன் புரோகிராமிற்குப் போட்டுத் தரவும்.

-என். சுகவனம், திருப்பூர்.

என்றைக்கு சயின்ஸ் மக்கள் வாழ்க்கையில் கலந்ததோ, அன்றே நாம் விஞ்ஞானத்திற்கு, அதன் சாதனங்களுக்கு அடிமை ஆகிவிட்டோம். நம் படைப்புகளுக்கு நாம் அடிமை. இதில் என்ன தனியே டிஜிட்டல் சாதனங்களுக்கு நாம் அடிமை எனத் தனியே சொல்ல வேண்டும்.

-ஆர். சி. கலாராணி, கோயம்புத்தூர்.

டி.டி.ஆர்.4 மற்றும் புதிய வர இருக்கும் சாதனங்களைப் பற்றி முதலில் கூறிய இதழ் நம் கம்ப்யூட்டர் மலர் இதழ்தான். கீ ப் இட் அப்.

-என். பார்த்திபன், புதுச்சேரி.

கூகுள் தரும் அலகு மாற்றத்தினைப் பயன்படுத்தி னேன். சூப்பராக தகவல்களைத் தருகிறது. எதிலும் தனித்தன்மையுடன் நம் சிரமத்தைக் குறைத்து சேவை தருவதில் கூகுள் நம்பர் ஒன்.

-ஓ. ராஜநாயகம், சென்னை.

குழந்தை வளர்ப்பு வெப்சைட் குறித்த தகவல் பயனுள்ளதாய் இருந்தது. குழந்தைகளுக்கு என வாரா வாரம் ஏதேனும் செய்திகள் தரவும். பல தாய்மார்கள் உங்களை வாழ்த்துவார்கள்.

-டி.கே. வித்யா மூர்த்தி, விழுப்புரம்.

ப்ராசசர் சிப்பில் இணைத்து விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம் -- ஆஹா! கேட்கவே விந்தையாக இருக்கிறது. மைக்ரோசாப்ட் மட்டும் தான் இந்த சிந்தனையைச் செயல்படுத்த முடியும்.

-பேரா. ஆர். மனோகரன், தாம்பரம்.

இணைய வேகத்தினை அளந்து காட்டும் வெப்சைட், நம்மிடம் ஐ.எஸ்.பி. நிறுவனங்கள் இன்டர்நெட் வேகம் குறித்து கூறுவதனை நாம் சோதித்துக் கொள்ள கிடைக்கும் உரைகல்.

-மா. ஜூலியானா, மதுரை.

128, 256 ஜிபிக்களில் பிளாஷ் ட்ரைவ்களா!! நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம். போகிற போக்கில், என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா நம் நக அளவு சிப்பில் வந்துவிடும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று எதிர்பார்க்கலாம்.

-டி. தினேஷ், காரைக்கால்.

டேப்ளட் பிசி - அடுத்த கல்வி ஆண்டில், ஆங்கில மீடியம் தொடக்க பள்ளிகளில், மாணவர்களுக்குத் தரப்படும் நோட்டு புத்தகங்களுடன் ஒன்று தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்போது எம்.பி.ஏ. மாணவர்களுக்கு லேப் டாப் கட்டாயப்படுத்துவது போல!

-பேரா, சி. ஆறுமுகம், பொள்ளாச்சி.

எக்ஸெல்லில் எட்ஜுக்குச் செல்லும் வழி பிரமாதம். இதுவரை நேரத்தை அதிகம் செலவழித்து, போராடி சில செல்களுக்குச் செல்லும் பழக்கத்தினைக் கொண்டிருந்தோம். நன்றி.

-சி. சரஸ்வதி பாஸ்கரன், திருநகர்.

ஏர்டெல் 3ஜி சேவை தொடங்கியது

இந்தியாவில் மொபைல் போன் சேவை வழங்குவதில் முதல் இடத்தில் இயங்கும் ஏர்டெல் நிறுவனம், 3ஜி சேவையினை பெங்களூருவில் சென்ற திங்கள் கிழமை தொடங்கியது. அடுத்ததாக, சென்ற ஜனவரி 27 அன்று, சென்னை மற்றும் கோவையிலும் தன் 3ஜி சேவையை வாடிக்கையாளர்களுக்குத் தரத் தொடங்கியுள்ளது. தனியார் நிறுவனப் பிரிவில், ரிலையன்ஸ் கம்யூனி கேஷன்ஸ், டாட்டா டெலிசர்வீசஸ் நிறுவனங்களை அடுத்து, ஏர்டெல் இந்த சேவையினை மக்களுக்கு வழங்குகிறது.

இந்த சேவை மூலம், மொபைல் வழி இன்டர்நெட் சேவையினை தென் பகுதி மக்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகிறோம் என்று ஏர்டெல் நிறுவனத்தின் மொபைல் சேவை பிரிவு தலைவர் அதுல் பிண்டால் கூறினார்.

இப்போது வைத்திருக்கும் சிம் கார்ட் மூலமாகவே, ஏர்டெல் வாடிக்கையாளர்கள் 3ஜி சேவையினைப் பெறலாம். லேப்டாப் பயன்படுத்துபவர்களுக்கு 3ஜி டேட்டா கார்டினை ஏர்டெல் வழங்குகிறது. அனைத்து தரப்பிலும் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக, பல்வேறு அளவுகளில் கட்டண விகிதங்களை ஏர்டெல் அறிவித்துள்ளது.

ஏர்டெல் வழங்கும் இன்டர்நெட் யூசேஜ் கால்குலேட்டர் மூலம், வாடிக்கையாளர்கள் தாங்கள் எந்த அளவில், 3ஜி சேவையைப் பயன்படுத்தி இன்டர்நெட் இணைப்பு பெறுகின்றனர் என்பதனை கண்காணிக்கலாம். இதன் மூலம் தங்கள் பயன்பாட்டினை வரையறை செய்திடலாம்.

3ஜி சேவை மூலம், வாடிக்கையாளர்கள், வீடியோ கான்பரன்சிங், அதிவேக இன்டர்நெட் இணைப்பு, வேகமான டேட்டா டவுண்லோடிங், கேம்ஸ் ஆகியவற்றைத் தங்கள் மொபைல் போன்களில் மேற்கொள்ளலாம். இதுவரை பி.எஸ்.என்.எல்., டாட்டா டெலிசர்வீசஸ் மற்றும் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் ஆகிய நிறுவனங்கள் 3ஜி சேவையினை வழங்கி வருகின்றன. வோடபோன் எஸ்ஸார். ஏர்செல், ஐடியா செல்லுலர் மற்றும் எஸ் - டெல் ஆகியவை இந்த சேவையை வழங்க உரிமம் பெற்றுள்ளன.

வரும் மார்ச் மாதத்திற்குள், ஏறத்தாழ 50 நகரங்களில் 3ஜி சேவையை வழங்க ஏர்டெல் நிறுவனம் திட்டமிடுகிறது. மீத நகரங்களில், 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் வழங்கப்படும். சென்ற டிசம்பர் முடிவிலான காலத்தில், பாரதி ஏர்டெல் நிறுவனத்தின் மொபைல் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 15 கோடி அளவில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தம் உள்ள 22 தொலை தொடர்பு மண்டலங்களில், 13 மண்டலங்களில் 3ஜி சேவை வழங்க, ஏர்டெல் ரூ.12,295 கோடி செலுத்தி உரிமம் பெற்றது. இந்த 13 மண்டலங்களில் மட்டுமின்றி, பிற மண்டலங்களில் இயங்கும் நிறுவனங்களுடன் இணைந்து மற்ற மண்டலங்களிலும் ஏர்டெல் இந்த சேவையை வழங்கும் எனத் தெரிகிறது.

3ஜி சேவை வழங்குவதற்கான தொலை தொடர்பு பொறியியல் கட்டமைப்பினை, எரிக்சன், சீமென்ஸ், ஹுவெய் மற்றும் ஐ.பி.எம். நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு ஏர்டெல் பெற்றுள்ளது.

நோக்கியாவின் புதிய போன் எக்ஸ் 02-1

வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த, நோக்கியாவின் எக்ஸ் 02-1 மொபைல் போன், அண்மையில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அதிகபட்ச விலை ரூ.4,459. பல இடங்களில் சற்றுக் குறைவான விலையிலும் கிடைக்கிறது.

இது மத்திய நிலையில் இயங்கும் ஒரு 2ஜி போன். நோக்கியாவின் எஸ் 40 ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்குகிறது. இதில் குவெர்ட்டி கீ போர்டு, 2.4 அங்குல வண்ணத்திரை, நெட்வொர்க் இணைப்பிற்கு ஜி.பி.ஆர்.எஸ்., எட்ஜ் மற்றும் A2DP இணைந்த புளூடூத் தொழில் நுட்பம், விநாடிக்கு 15 பிரேம் வேகத்தில் செயல்படும் வீடியோ விஜிஏ கேமரா, எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ். வசதி, ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, எம்பி4 மற்றும் எம்பி3 மியூசிக் பிளேயர், 64 எம்.பி. நினைவகம், 8 ஜிபி வரை மெமரி அதிகப்படுத்த மைக்ரோ எஸ்.டி. கார்ட் ஸ்லாட், ஸ்பீக்கர் போன், 3.5 மிமீ ஆடியோ ஜாக்,லித்தியம் அயன் 1,020 எம்.ஏ.எச். பேட்டரி ஆகியவை உள்ளன. ஒருமுறை சார்ஜ் செய்தால் 480 மணி நேரம் பேட்டரி சக்தியுடன் இருக்கும். தொடர்ந்து 4.5 மணி நேரம் பேச முடியும்.

இதன் பரிமாணம் 119.4 x 59.8 x 14.3 மிமீ. எடை 107.5 கிராம்.

மோட்டாரோலா டூயல் சிம்

மோட்டாரோலா நிறுவனத்தின் இரண்டு சிம் இயக்க போன் ஒன்று அண்மையில் மொபைல் சந்தையில் பிரபலமாகி வருகிறது. இந்த மாடல் பெயர் இ.எக்ஸ். 115 ஸ்டார்லிங். நான்கு பேண்ட் அலைவரிசையில் இயங்குகிறது. இதன் மெமரி 128 எம்.பி. மைக்ரோ எஸ்.டி. கார்ட் போர்ட் உள்ளது. பார் டைப் வகையில் கருப்பு வண்ணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 3 எம்.பி. திறனுடன் கூடிய கேமரா, வீடியோ எடுக்கும், இயக்கும் திறன் கொண்டது. டிஜிட்டல் ஸூம் தரப்பட்டுள்ளது. எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ். வசதி, எம்.பி.4 மற்றும் எம்.பி.3 பிளேயர், ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ, A2DP இணைந்த புளூடூத் ஆகியவை தரப்பட்டுள்ளன. ஜி.பி.ஆர்.எஸ். மற்றும் எட்ஜ் தொழில் நுட்பங்கள் நெட்வொர்க்கிற்கு உதவுகின்றன. உள் நினைவகம் 50 எம்.பி.

இதன் பேட்டரி 930 mAh ஆக உள்ளது. 250 மணி நேரம் தாக்குப் பிடிக்கிறது. 192 நிமிடங்கள் பேசுவதற்குக் கிடைக்கிறது. இதன் பரிமாணம் 109x61x12.4 மிமீ. எடை 102 கிராம்.

இதன் அதிக பட்ச விற்பனை விலை ரூ. 4,567.

கேள்வி:

டேப்ளட் பிசி குறித்து அதிகம் எழுதப்படுகிறது; நாங்களும் கேள்விப்படுகிறோம். சுருக்கமாக, இன்றைய கம்ப்யூட்டர்கள் தராத, டேப்ளட் பிசிக்களில் கிடைக்கும் வசதிகள் என்ன என்று சொல்ல முடியுமா?

-ஆர். சந்திரப் பிரகாஷ், சோழபுரம்

பதில்: இந்த வசதிகள் குறித்து, தாங்கள் கூறுவது போல, கம்ப்யூட்டர் மலரில் பல கட்டுரைகள் வெளியிடப்பட்டன. தொடர்ந்து எழுதிக் கொண்டிருக் கிறோம். வரும் காலத்தில் கம்ப்யூட்டர் பயன்பாட்டில் பெரிய மாற்றத்தை டேப்ளட் பிசிக்கள் கொண்டுவர இருக்கின்றன. அவற்றின் பயன்கள் பலவாகும். நீங்கள் கேட்பது போல சுருக்கமாகச் சொல்வதென்றால், எங்கும் எளிதாக எடுத்துச் செல்லும் தன்மை, மொபைல் போனாகவும் (3ஜி மற்றும் 4ஜி வசதியுடன்) பயன்படுத்தும் வசதி, வை-பி இணைப்பு, இ-புக் ரீடராகச் செயலாற்றும் திறன், கேம்ஸ் விளையாட உதவிடும் சாதனம், ஆன்லைனில் செய்தி, பாடல், படம் பார்க்கும் வசதி, சமுதாய தளங்களை அணுகும் வசதி எனப் பல அம்சங்களை அடுக்கலாம்.

நீங்கள் இதற்கெல்லாம் தயாராகிக் கொள்ளுங்கள். அல்லது இப்போதே இங்கு கிடைக்கும் டேப்ளட் பிசிக்களை வாங்கிப் பயன்படுத்துங்கள்.

கேள்வி: வேர்ட் புரோகிராமில் பைல் ஒன்றைத் திறக்க Open மெனுவில் கிளிக் செய்தால் கிடைக்கும் பைல் பட்டியலில் அனைத்து டாகுமெண்ட் பைல்களும் கிடைக்கின்றன. இதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட எழுத்தில் மட்டும் தொடங்கும் பைல் கிடைத்தால், நான் விரும்பும் பைலை விரைவில் தேர்ந்தெடுக்க எளிதாக இருக்குமே. இதற்கான வசதி உள்ளதா?

-டி. பூர்ண பிரகாஷ், செங்கல்பட்டு.

பதில்: நல்ல கேள்வி. பைல் ஒன்றை வேர்ட் புரோகிராமில் திறக்க விரும்பி, Open ஐகானை அழுத்துகிறீர்கள். உடனே உங்களுக்கு வேர்ட் Open டயலாக் பாக்ஸைத் திறந்து காட்டி, கர்சர் File Name என்ற கட்டத்தில் நிற்கிறது. நீங்கள் S என்ற எழுத்தில் தொடங்கும் டாகுமெண்ட் பைல்களின் பட்டியலை மட்டும் பெற விரும்பினால், S*.doc என டைப் செய்து என்டர் தட்டவும். உடன், அந்த ட்ரைவில் உள்ள டைரக்டரிகள், அல்லது போல்டர்கள் முதலாவதாகவும், பின்னர் S என்ற எழுத்தில் தொடங்கும் பைல்கள் அடுத்ததாகவும் கிடைக்கும். இனி

கேள்வி-பதில்

இதில் நீங்கள் விரும்பும் பைலைத் தேர்ந்தெடுத்து திறக்கலாம். அதிக பைல்களை ஒரு போல்டரில் வைத்திருக்கையில் இந்த கட்டளை உங்களுக்குப் பயன் தரும். டாகுமெண்ட் பைல்கள் மட்டுமின்றி, வேறு எக்ஸ்டன்ஷிகள் கொண்ட பைல்களையும் பட்டியலிட்டுக் கேட்கலாம். எடுத்துக் காட்டாக, டெக்ஸ்ட் பைல் ஒன்றைத் திறக்க வேண்டும் எனில் பொதுவாக *.txt எனக் கொடுத்துப் பெறலாம். இந்த வகைப் பைல்களில் S என்ற எழுத்தில் தொடங்கும் பைல் மட்டும் வேண்டும் எனில், S*.txt என டைப் செய்து பட்டியலைப் பெறலாம்.

கேள்வி: நான் விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்துகிறேன். என் கம்ப்யூட்டரில் 512 எம்பி ராம் மெமரி தான் உள்ளது. இதில் சில நேரங்களில் கேம்ஸ் லோட் செய்திடுகையில், அதற்கேற்ற வகையில் ராம் மெமரி கிடைக்கும் என எப்படி அறிவது?

-சி. பரணிராணி, மதுரை.

பதில்: உங்கள் கேம்ஸ் இயங்கத் தேவையான மெமரி எவ்வளவு என்று



உங்களுக்குத் தெரியாதே. பின் எப்படி அதற்குப் போதிய மெமரி இருக்கிறதா என அறிவது? ஆனால், கம்ப்யூட்டரைப் பயன்படுத்தும் எந்த நேரத்திலும் நாம் ராம் மெமரியில் எவ்வளவு காலி இடம் உள்ளது என அறியலாம். இதற்கு கண்ட்ரோல் மற்றும் ஆல்ட் (Control, Alt,) பட்டன்களை அழுத்திக் கொண்டு டெலீட் (Delete) பட்டனை ஒரு முறை அழுத்தவும். இவ்வாறு அழுத்திய வுடன் கம்ப்யூட்டரில் விண்டோஸ் டாஸ்க் மேனேஜர் (Windows Task Manager) திரை கிடைக்கும். இதில் உள்ள டேப்களில் Performance என்ற டேபைத் தேர்ந் தெடுக்கவும். இதில் Physical Memory, Available என்ற பிரிவை நீங்கள் காணலாம். இதில் கிடைக்கும் எண் எத்தனை கிலோபைட் இடம் இன்னும் காலியாக உள்ளது என்று காட்டும். இதனை நீங்கள் எம்பி அளவில் பெற வேண்டுமென்றால் 1000 ஆல் வகுக்க வேண்டும். தோராய மான அளவில் எத்தனை எம்.பி. எனத் தெரிய வரும்.

கேள்வி: என் கம்ப்யூட்டர் ரூயல் கோர், எக்ஸ்பி வகையைச் சேர்ந்தது. இதில் திடீரென வால்யூம் ஐகானைக் காணவில்லை. என்ன நடந்தது எனத் தெரியவில்லை. ஆனால் சவுண்ட் எல்லாம் சரியாக வருகிறது. எங்கு பிரச்னை?

-என். காமராஜ், திருமங்கலம்.

பதில்: உங்கள் டாஸ்க் பாரில் வலது மூலையில் கடிகாரத்திற்கு அடுத்ததாக அமர்ந்து கம்ப்யூட்டர் தரும் ஆடியோ அளவைக் கட்டுப்படுத்த உதவும் ஐகானைக் கானவில்லையா? என்ன செய்திடலாம்? உங்களிடம் விண்டோஸ் எக்ஸ்பி ஆப்பரேட்டிங் சிஸ்டம் உள்ளதா? முதலில் Start —> Control Panel செல்லுங்கள்; பின் Sounds, Speech and Audio Devices என்ற தொடர்பில் கிளிக் செய்திடவும். இதனை அடுத்து Sounds and Audio Devices என்ற இடத்தில் கிளிக் செய்து அப்பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது டேப்கள் உள்ள டயலாக் பாக்ஸ் ஒன்று தோன்றும். இதில் Volume டேப் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதில் “Place volume control icon in the taskbar” என்பதன் எதிரே உள்ள கட்டத்தில் டிக் அடையாளம் உள்ளதா எனக் கண்டறியுங்கள். இல்லை எனில் அதனை ஏற்படுத்தவும். இப்போது ஒலி அளவை மாற்ற

உதவும் ஐகான் உங்கள் டாஸ்க் பாரில் அமர்ந்திருக்கும். இதனைப் பயன்படுத்தி உங்களுக்குப் பிரியமான பாடலை பிடித்த அளவிலான ஒலியோடு கேட்டு மகிழலாம்.

கேள்வி: நான் பெரும்பாலும் தமிழில் பெயர்களை டைப் செய்துவிட்டு இனிஷியலை ஆங்கிலத்தில் அமைக்க, பாண்ட் சென்று மாற்றி ஆங்கில எழுத்தினைக் கொண்டு வந்து பின் மாற்ற வேண்டியுள்ளது. வேறு சுருக்கு வழி உள்ளதா?

-எம். வெங்கடேச பெருமாள், திண்டுக்கல்.

பதில்: நீங்கள் தமிழ் டைப் செய்திட என்ன சாப்ட்வேர் அல்லது ட்ரைவர் பயன்படுத்துகிறீர்கள் என்று குறிப்பிட வில்லை. பொதுவாக யூனிகோட் எழுத்தில் நீங்கள் டைப் செய்தால், நீங்கள் பயன்படுத்தும், தமிழுக்கான ட்ரைவரிலேயே, ஆங்கிலத்திலும் தமிழிலும் மாறிக் கொள்ள ஏதேனும் இரண்டு கீகளை இணைத்துப் பயன்படுத்துமாறு தந்திருப்பார்கள். அல்லது நீங்களே அமைத்துக் கொள்ளுமாறு வைத்திருப்பார்கள். அவற்றைப் பயன்படுத்தினாலே போதும். உடன் ஆங்கில எழுத்தில் டைப் செய்திடலாம். பின்னர், உடனே மீண்டும் தமிழுக்கு மாறிவிடலாம். இந்த எழுத்துவகையில் ஆங்கிலமும் தமிழும் ஒரே எழுத்துவகையில் இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். டிஸ்கி (TISCII) என்ற எழுத்து வகையிலும் இதே போல இருக்கும். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மாறுவதற்கு, எடுத்துக் காட்டாக, ஆல்ட் + கே வைத்திருந்தால், இதனை மட்டும் அழுத்தினால் போதும்.

கேள்வி: வேர்ட் தொகுப்பில் உருவாக்கும் டாகுமெண்ட்களில் பல சொற்களின் கீழாக அன்டர்லைன் செய்கையில் சொற்களுக்கு இடையே கோடில்லாமல் சொற்களுக்கு மட்டும் கோடிடுவது எப்படி?

-என்.மல்லிகா, பொள்ளாச்சி.

பதில்: முதலில் எந்த சொற்களுக்குக் கீழ் அடிக்கோடு வர வேண்டும் என எண்ணுகிறீர்களோ, அவற்றைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Ctrl + Shift + W என்ற கீகளை அழுத்தவும். இப்போது சொற்களின் கீழாக மட்டும் அடிக்கோட்டினைப் பார்க்கலாம். சொற்களுக்கு இடையே உள்ள இடைவெளிகளில் கோடு இருக்காது. இதுவும் ஒரு அழகுதான்.

கேள்வி: வேர்டில் டெக்ஸ்ட் காப்பி செய்து ஒட்ட கண்ட்ரோல்+சி மற்றும் கண்ட்ரோல் +வி பயன்படுத்துகிறேன். ஆனால் என் நண்பரின் கம்ப்யூட்டரில் இன்ஸெர்ட் கீ அழுத்தினாலே, டெக்ஸ்ட் பேஸ்ட் ஆகிறது. இருவரும் ஆபீஸ் 2003 தான் பயன்படுத்துகிறோம். சிஸ்டம் எக்ஸ்பி.

-சி.மோகன், சென்னை.

பதில்: இன்ஸெர்ட் கீ அழுத்தினால் டெக்ஸ்ட் ஒட்டப்பட வேண்டுமானால், உங்கள் வேர்ட் புரோகிராமில் கீழ்க்காணும் செட் அப் வழிகளை மேற்கொள்ளவும்.

மெனு பாரில் Tools கிளிக் செய்து பின் விரியும் மெனுவில் இறுதியாக உள்ள Options என்பதனைக் கிளிக் செய்திடவும். இதில் கிடைக்கும் பல டேப்களில் Edit டேபினைக் கிளிக் செய்தால் பல செக் பாக்ஸ் கிடைக்கும். அதில் “Use the INS key for paste” என்ற செக் பாக்ஸ் முன் டிக் அடையாளத்தை ஏற்படுத்திப் பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இனி ஏதாவது காப்பி அல்லது கட் செய்த டெக்ஸ்ட் அல்லது படத்தை ஒட்ட வேண்டுமானால், இன்ஸெர்ட் கீயைக் கிளிக் செய்தால் போதும். கிளிப் போர்டில் உள்ள படம் அல்லது டெக்ஸ்ட் ஒட்டப்படும்.

கேள்வி: எக்ஸெல் தொகுப்பில் Proper என்ற பங்சன், எந்த வகை கணக்கில் பயன்படுத்தப்படுகிறது. இதன் பயன் என்ன? பார்முலா அமைக்கலாம் என்றால், அதன் வடிவம் என்ன?

-கே. இன்பசேகரன், திருவில்லிபுத்தூர்.

பதில்: இது எக்ஸெல் ஒர்க்புக்கில் செல்களில் அமைக்கப்படும் பெயர்களுக்கானது ஒரு செல்லில் உங்கள் பெயரை A1 செல்லில் inbasekaran என்று டைப் செய்திடுங்கள். எப்படி என் பெயர் முதல் எழுத்தை சிறிய எழுத்தாக டைப் செய்தீர்கள் என்று கோபம் வருகிறதா! உடனே இன்னொரு செல், செல்லுங்கள். B1 என வைத்துக் கொள்வோம். இங்கு =PROPER(A1) என பார்முலா கொடுங்கள். உடனே அந்த செல்லில் உங்கள் பெயர் Inbasekaran எனக் காட்டப்படும். புரிகிறதா! இந்த கட்டளை எதற்கென்று.